திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் ஆற்றங்கரை பகுதியில் மூளிகை மரக்கன்று நடும் பணியினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.விஎம்.ராஜலெட்சுமி அவர்கள் துவக்கி வைத்தார்.

----

திருநெல்வேலி மாவட்டம் பாபநாசத்தில், பாபநாசம் உலக தமிழ் மருத்துவ கழகம் மூலம் மூளிகை நந்தவனம் மரக்கன்று நடும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.விஎம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு மூளிகை மரக்கன்றுகளை நடுவு செய்து நந்தவனம் அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்.

பின்னர் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சிறப்பான முயற்சியால் தாமிரபரணி ஆற்று கரை பகுதி தூய்மைப்படுத்தும் பணிகள் பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகிறது. இன்று பாபநாசம் முதல் சீவலப்பேரி வரை 72 கி.மீ. தூரத்திற்கு சுத்தம் படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாபநாசம் பகுதியில் ஏற்ட்டுள்ள மாசு சுத்தம் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து .இப்பகுதி சுத்தமாக இருக்க மூளிகை நந்தவனம் சுற்று சூழல் பூங்கா உலக தமிழ் மருத்துவ கழகம் மூலம் அமைக்கப்படுகிறது. தாமிரபரணி ஆற்றின் தண்ணீர் நமது ஜீவ ஆதரமாக இருப்பதால் பொதுமக்கள் இப்பகுதியை தூய்மையாக வைத்திருக்க உதவிட வேண்டும். என பேசினார்.

விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஜீவ நதி தாமிரபரணி ஆகும். தாமிரபரணி நதியை தூய்மையாக வைத்திருக்க தூய்மை பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு தாமிரபரணி ஆற்று பகுதியை தூய்மையாக வைத்திருக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இன்று 72 கி.மீ நடைபெற்ற தூய்மை பணிகளில் கல்லூரி மாணவ, மாணவிகள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள், அரசு பணியாளர்களின் சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட 20 ஆயிரத்து மேற்பட்டோர் பங்கேற்றனர். மேலும் ஒவ்வொரு பகுதியிலும் ஆற்றங்கரை பகுதிகளை சுத்தமாக வைத்திருக்க பொதுமக்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கருத்துகளின் அடிப்படையில் அந்தந்த பகுதிகளின் உள்ள பிரச்சனைகள் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இன்று நடைபெற்றுள்ள தூய்மை பணிகளில் சுமார் 75 டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டுள்ளது. 3 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் தாமிரபரணி ஆற்றினை தூய்மைப்படுத்தும் பணிகள் தொடர்ந்து நடைபெறும். பாபநாசம் பகுதியில் உலக தமிழ் மருத்துவ கழகத்தின் சார்பில் 100 வகையலான மூளிகை மரக்கன்றுகள் இன்று நடவு செய்யப்படுகிறது. இப்பணிகளை சிறப்பாக செய்து வரும் உலக தமிழ் மருத்துவ கழகத்தினை பாராட்டுகிறேன் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.முருகையாபாண்டியன், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட

இயக்குநர் திரு.பழனி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சக்திவேல்முருகன், திரு.சுப்பையாபாண்டியன், ஆவின் தலைவர் திரு.ரமேஷ், டான்பேட் துணைத் தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ, நெசவாளர் சங்கம் தலைவர் திரு.ஆறுமுகம், பாபநாசம் உலக தமிழ் மருத்துவ கழக தலைவர் மருத்துவர் மைக்கேல் செயராசு, பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரி முதல்வர் திருஇஅழகப்பன் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி